DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW2/PW4

| | | | |
|---|---|---|---|
| Name | சிவப்பிரியா | Taluk | |
| Husband's Name | வேல்முருகன் | Village | |
| Age | 40 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது புதுப்பேட்டை, நண்பர்கள் நகரில் வசித்து தற்போது உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அ.சா-1 வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவரை தெரியும். அவர் பண்ருட்டி அரசு மருத்துவமனை புறகாவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது, நான் மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்தபோது அவரை தெரியும். பட்டியல் சாட்சிகள் சிவப்பிரியா மற்றும் ராஜேஷ் ஆகியோர்களை தெரியும். நான் இதற்கு முன்னர் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்தபோது, மேற்படி மருத்துவமனையில் என்னுடன் மேற்சொன்ன அன்னபூரணி செவிலியராக பணிபுரிந்தார். அப்போது ராஜேஷ் மேற்படி மருத்துவமனை 108 ஆம்புலன்சில் Emergency Medical Technician (EMT) ஆக பணிபுரிந்தார். மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் கார்த்திகேயன் மருத்துவராக பணிபுரிந்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 2021 ஆம் வருடம், நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்த சமயத்தில் ஒருநாள், நான் மேற்படி மருத்துவமனையில் Injection OP பிரிவில் இரவு பணியில் இருந்தபோது, (தேதி, மாதம், நேரம் தற்போது நியாபகமில்லை) Injection OP அறைக்கு வெளியே சத்தம் கேட்டது. நான் உடனே வெளியே சென்று பார்த்தபோது, கூட்டமாக இருந்தது. அங்கு மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் அடிப்பட்டு, இரத்தக்காயத்துடன் இருந்தார். அவருக்கு எப்படி காயம்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தபோது, யாரோ ஒருவர் மேற்சொன்ன வெங்கடேசனுடன் சண்டை போட்டு அடித்துவிட்டதாக கூறினார்கள். நான் மேற்படி வெங்கடேசனை விசாரித்து, எதுவும் தெரிந்துகொள்ளவில்லை. ஏனென்றால், அப்போது நான், அவரை விசாரிக்கக்கூடிய நிலையில் அவர் இல்லை, அவருக்கு ஏற்பட்ட காயத்தின் வ லியில் இருந்ததாலும், மேலும் நான் மேற்சொன்ன Injection OP பிரிவில் பல

நோயாளிகள் சிகிச்சைக்காக காத்துக்கொண்டிருந்ததாலும், நான் வெங்கடேசனிடம் கேட்டு விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை, பிறகு கேட்டுத்தெரிந்துக்கொள்ளலாம் என்று இருந்தேன், ஆனால் எனக்கு வேலை பளுவின் காரணமாக அதைப்பற்றி நான் அவரிடம் கேட்கவில்லை. இதைத்தவிர எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கடந்த 08.02.2021 அன்று இரவு நானும், என்னுடன் செவிலியர் அன்னபூரணியும் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் கார்த்திகேயன் பணியில் இருந்தார் என்றும், எங்கள் அறைக்கு அருகில் புறக்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் பணியில் இருந்தார் என்றும், 09.02.2021 அன்று அதிகாலை, 2.35 மணியளவில் திருநாவலூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த மணலூர் கிராமத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் மனைவி உண்ணாமலை மற்றும் அவரது மகன் வெங்கடேசன் ஆகியோர்கள் அவர்கள் ஊரில் நடந்த அடிதடி சண்டை சம்மந்தமாக 108 மூலம் மேற்படி மருத்துவமனைக்கு வந்து, சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது, அவர்களது உறவினர்களான அங்கு வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த புதுப்பேட்டையை சேர்ந்த வைத்தியநாதன் மகன் பாவாடைராயன் என்பவர் அவர்களுக்கு ஆதரவாக மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசனிடம் சென்று, அவர்கள் இருவருக்கும் ஏ.ஆர் பதிவு செய்யுமாறு கூறினார் என்றும், அதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அவரிடம், மருத்துவரிடம் சொல்லுங்கள் அவர் எழுதுவார் என்று சொன்னதற்கு, அவர் சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து பணம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிட்டு கேஸ் எழுதுடா என்றும், அசிங்கமான வார்த்தையை சொல்லி அசிங்கமாக திட்டினார் என்றும், அதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அந்த நபரிடம் மரியாதையாக பேசுங்கள், எதுவாக இருந்தாலும் பேசுங்கள், எதுவாக இருந்தாலும் மருத்துவரை போய் பாருங்கள் என்று சொன்னதற்கு அவர், சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, நான் யார் தெரியுமா, நீ என்ன பெரிய அசிங்கமான வார்த்தையை சொல்லி கேஸ் எழுதுடானு சொன்னா, நீ எழுத மாட்டிங்குற என்று சொல்லி தன் கையால் சிறப்பு உதவி ஆய்வாளரின் இடதுபக்க தாடையின் ஓங்கி குத்தினார் என்றும், அதில் அவருக்கு இடது பக்க கீழ் உதட்டில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், உடனே சம்பவத்தை பார்த்த நானும், என்னுடன் இருந்த அன்னபூரணியும் மற்றும் அங்கிருந்த 108 ஆம்புலன்சில் பணிபுரியும் ராஜேஷ் என்பவரும்,

பாவாடைராயனை சத்தம் போட்டு, விலகி போக சொன்னோம் என்றும், அதற்கு அவர் அங்கு நோயாளிகளுக்கு குளுக்கோஸ் போடும் இரும்பு ஸ்டான்டை தூக்கி காட்டி சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, மரியாதையா கேஸ் எழுதளான உன்ன இதாலே அடிச்சி கொன்னுடுவேன் என்று மிரட்டினார் என்றும், உடனே மருத்துவமனையில் இருந்தவர்களும், நாங்களும் அவரை அங்கிருந்து வெளியே அனுப்பி வைத்தோம் என்றும், பிறகு சிறப்பு உதவி ஆய்வாளர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு, மேற்படி மருத்துவமனையிலேயே மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலிசாரிடம் சொல்லிவிட்டு, தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

அவசர சிகிச்சை பிரிவில் உள்பகுதியை நோக்கி சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.

**அரசு தரப்பில் மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW3/PW5

| Name | அன்னபூரணி | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | சத்தியமூர்த்தி | Village | |
| Age | 38 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பண்ருட்டி, சத்தியமூர்ததி தெருவில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் பண்ருட்டி அன்வர்ஷா நகரில் வசித்துவந்தேன். தற்போது பண்ருட்டி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அ.சா-1 வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவரை தெரியும். அவர் பண்ருட்டி அரசு மருத்துவமனை புறகாவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது, நான் மேற்படி மருத்துவமனையில் பணிபுரிந்தபோது அவரை தெரியும். அ.சா-4 சிவப்பிரியா மற்றும் ராஜேஷ் ஆகியோர்களை தெரியும். சிவப்பிரியா என்னுடன் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்தார். அப்போது ராஜேஷ் மேற்படி மருத்துவமனை 108 ஆம்புலன்சில் Emergency Medical Technician (EMT) ஆக பணிபுரிந்தார். மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் கார்த்திகேயன் மருத்துவராக பணிபுரிந்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

**1.** நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில், கடந்த 6 வருடங்களாக செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ஆம் வருடம் முதல் மேற்படி மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2021 அன்று இரவு முதல் நான் இரவுப்பணியில் இருந்தேன். மேற்படி இரவுப்பணி முதல் நாள் இரவு 7.00 மணியில் ஆரம்பித்து, மறுநாள் காலை 7.00 மணிவரை இருக்கும். நான் மேற்சொன்ன 08.02.2021 அன்று

இரவுப்பணிக்கு நான் இரவு 7.00 மணிக்கு மேற்படி மருத்துவமனைக்கு சென்று, பணி முடித்து மறுநாள் 09.02.2021 அன்று, காலை 7.00 மணிக்கு மேற்படி மருத்துவமனையிலிருந்து புறப்பட்டேன். மேற்படி 08.02.2021 அன்று இரவு 7.00 மணிமுதல் 09.02.2021 அன்று காலை 7.00 மணிவரை நான் பிரசவ பிரிவில் இருந்தேன். மேற்படி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவும், பிரசவ பிரிவும் மேற்படி மருத்துவமனை வளாகத்தில் ஒரே கட்டிடத்தில் உள்ளது என்றால் சரிதான், சாட்சி தாமாக முன்வந்து மீண்டும் மேற்படி அவசர சிகிச்சை பிரிவும், பிரசவ பிரிவும் தனித்தனி கட்டிடத்தில் உள்ளது என்று கூறுகிறார். மேற்படி அவசர சிகிச்சை பிரிவு கட்டிடத்திற்குள் தான் புறக்காவல் நிலைய அறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி புறக்காவல் நிலைய அறை அல்லது அவசர சிகிச்சை பிரிவில் பெரிய அளவில் சண்டை நடந்தால், சண்டையில் சம்மந்தப்பட்ட தாக்கிய நபரும், தாக்கப்பட்ட நபரும் போடும் சத்தம் பிரசவ பிரிவில் இருப்பவர்களுக்கு கேட்கும் என்றால் சரியல்ல. மேற்படி அவசர சிகிச்சை பிரிவு மற்றும் புறக்காவல் நிலைய அறை மேற்படி பிரசவ பிரிவு அறையிலிருந்து 300 மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். ஆனால், மேற்படி புறக்காவல் நிலைய அறை அல்லது அவசர சிகிச்சை பிரிவில் பெரிய அளவில் , சண்டை நடந்தால், சத்தம் கேட்காது. மேற்படி வழக்கு சம்பவத்தின்போது, நான் அவசர சிகிச்சை பிரிவில் சிவப்பிரியா என்பவருடன் தான் இரவுப்பணியில் இருந்தேன் என்றும், மேற்படி வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றும், சண்டையை விலக்கிவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்து, விலக்கிவிட்டு தற்போது மேற்படி சம்பவத்தின்போது நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இல்லாமல் பிரசவ பிரிவில் பணியில் இருந்ததாகவும், சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்து, சண்டையை விலக்கிவிடவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கடந்த 08.02.2021 அன்று இரவு நானும், என்னுடன் செவிலியர் சிவப்பிரியாவும் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் கார்த்திகேயன் பணியில் இருந்தார் என்றும், எங்கள் அறைக்கு அருகில் புறக்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் பணியில் இருந்தார் என்றும், 09.02.2021 அன்று அதிகாலை, 2.35 மணியளவில் திருநாவலூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த மணலூர் கிராமத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் மனைவி உண்ணாமலை மற்றும் அவரது மகன் வெங்கடேசன் ஆகியோர்கள் அவர்கள் ஊரில் நடந்த அடிதடி சண்டை சம்மந்தமாக 108 மூலம் மேற்படி மருத்துவமனைக்கு வந்து, சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது, அவர்களது உறவினர்களான அங்கு வந்த பின்னர் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த புதுப்பேட்டையை

சேர்ந்த வைத்தியநாதன் மகன் பாவாடைராயன் என்பவர் அவர்களுக்கு ஆதரவாக மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசனிடம் சென்று, அவர்கள் இருவருக்கும் ஏ.ஆர் பதிவு செய்யுமாறு கூறினார் என்றும், அதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அவரிடம், மருத்துவரிடம் சொல்லுங்கள் அவர் எழுதுவார் என்று சொன்னதற்கு, அவர் சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து பணம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிட்டு கேஸ் எழுதுடா என்றும், அசிங்கமான வார்த்தையை சொல்லி அசிங்கமாக திட்டினார் என்றும், அதற்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அந்த நபரிடம் மரியாதையாக பேசுங்கள், எதுவாக இருந்தாலும் பேசுங்கள், எதுவாக இருந்தாலும் மருத்துவரை போய் பாருங்கள் என்று சொன்னதற்கு அவர், சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, நான் யார் தெரியுமா, நீ என்ன பெரிய அசிங்கமான வார்த்தையை சொல்லி கேஸ் எழுதுடானு சொன்னா, நீ எழுத மாட்டிங்குற என்று சொல்லி தன் கையால் சிறப்பு உதவி ஆய்வாளரின் இடதுபக்க தாடையின் ஓங்கி குத்தினார் என்றும், அதில் அவருக்கு இடது பக்க கீழ் உதட்டில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், உடனே சம்பவத்தை பார்த்த நானும், என்னுடன் இருந்த சிவப்பிரியாவும் மற்றும் அங்கிருந்த 108 ஆம்புலன்சில் பணிபுரியும் ராஜேஷ் என்பவரும், பாவாடைராயனை சத்தம் போட்டு, விலகி போக சொன்னோம் என்றும், அதற்கு அவர் அங்கு நோயாளிகளுக்கு குளுக்கோஸ் போடும் இரும்பு ஸ்டான்டை தூக்கி காட்டி சிறப்பு உதவி ஆய்வாளரை பார்த்து, மரியாதையா கேஸ் எழுதளான உன்ன இதாலே அடிச்சி கொன்னுடுவேன் என்று மிரட்டினார் என்றும், உடனே மருத்துவமனையில் இருந்தவர்களும், நாங்களும் அவரை அங்கிருந்து வெளியே அனுப்பி வைத்தோம் என்றும், பிறகு சிறப்பு உதவி ஆய்வாளர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு, மேற்படி மருத்துவமனையிலேயே மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு போலிசாரிடம் சொல்லிவிட்டு, தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW5/PW2

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வம் | Taluk | |
| Father's Name | இராமதாஸ் | Village | |
| Age | 32 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் தற்போது பண்ருட்டி, சத்தியமூர்த்தி தெருவில் வசித்து வருகிறேன். நான் 10 ஆண்டுகளாக தனியார் ஆம்புலன்ஸ் ஓட்டுனராக இருந்துவருகிறேன். மேற்படி மருத்துவமனையில் நான் 10 ஆண்டு காலமாக மேற்படி பணியில் இருப்பதனால், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் என்பவர் எனக்கு நன்கு பழக்கம் என்றால் சரிதான். பண்ருட்டியில் கார் ஸ்டாண்ட் ஆனது,கடலூர் மெயின்ரோட்டில் உள்ளது என்றாலும், அது பண்ருட்டி அரசு மருத்துவமனையிலிருந்து ஒன்றரை கி.மீ தொலைவில் உள்ளது என்றாலும் சரிதான். பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில், அவசர சிகிச்சை பிரிவிலிருந்து, மேற்படி மருத்துவமனைக்கு வெளியில் உள்ள வேன் ஸ்டாண்டிற்கும் இடையேயான தூரம் சுமார் 300 மீ என்றால் சரிதான். இவ்வழக்கில் வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்வது தொடர்பாக போலிசார் என்னை அழைத்தபோது காலை சுமார் 8.00 மணியிருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் எதுவும் எழுதாக வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றாலும், இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எனது முன்னிலையில் தயாரிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், ஆனால் என்னிடம் கையொப்பம் பெறும்போது, அது எதுவும் எழுதாக வெள்ளைத்தாளாக இருந்தது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிஸ் விசாரணையிலும், எனது முதல் விசாரணையில், போலிசார் என்னை விசாரித்தது சம்மந்தமாகவும், மேற்படி பண்ருட்டி காவல் நிலைய உதவி

ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்பும், ஸ்ரீதர் முன்பும் பார்வையிட்டு, மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தது சம்மந்தமாகவும், மேற்படி தயார் செய்த பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்தது சம்மந்தமாகவும், சொல்லிவிட்டு, தற்போது முதல் விசாரணைக்கும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு மாற்றத்தால், அரசு தரப்பிலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை - இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW6/PW3

| | | | |
|---|---|---|---|
| Name | ஸ்ரீதர் | Taluk | |
| Father's Name | ராஜாங்கம் | Village | |
| Age | 37 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **05.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் தற்போது பண்ருட்டி, சத்தியமூர்த்தி தெருவில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணிபுரிகிறேன். பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில், அவசர சிகிச்சை பிரிவிலிருந்து, மேற்படி மருத்துவமனைக்கு வெளியில் உள்ள வேன் ஸ்டாண்டிற்கும் இடையேயான தூரம் சுமார் 300 மீ என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. போலிசார் என்னிடம் எதுவும் எழுதாக வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றாலும், இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எனது முன்னிலையில் தயாரிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான், ஆனால் என்னிடம் கையொப்பம் பெறும்போது, அது எதுவும் எழுதாக வெள்ளைத்தாளாக இருந்தது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிஸ் விசாரணையிலும், எனது முதல் விசாரணையில், போலிசார் என்னை விசாரித்தது சம்மந்தமாகவும், மேற்படி பண்ருட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை என் முன்பும், செல்வம் முன்பும் பார்வைவிட்டு, மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தது சம்மந்தமாகவும், மேற்படி தயார் செய்த பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்தது சம்மந்தமாகவும், சொல்லிவிட்டு, தற்போது முதல் விசாரணைக்கும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட ஏதோ ஒரு மாற்றத்தால், அரசு தரப்பிலிருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை- இல்லை.**